# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 08.09.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.17/2025 |
| Deposition of Witness for Prosecution | : | PW.4 |
| Name | : | ரவி |
| Father Name | : | பொன்ராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 08.09.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், மஞ்சக்குட்டையில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 5 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் ஆஜர் எதிரிக்கும், அ.சா.1 குப்புசாமிக்கும் இடையே ஏற்பட்ட சண்டை குறித்து விசாரிக்க போலீசார் எஸ்டேட்டிற்கு வந்தனர். அங்கு பணியில் இருந்த என்னிடம் சம்பவ நடந்த இடத்தை காண்பிக்க சொன்னார்கள். அங்கு மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நான் கையெழுத்து கேட்டார்கள், நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் வரைபடம் தான் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1–வது கையொப்பம் என்னுடையது தான். **<u>அந்த 1–வது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1–வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த**

**1–வது கையொப்பம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(அரசுத் தரப்பில் சாட்சியை கைப்பற்றுதல் மகஜர் குறித்து பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டுஅனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

கடந்த 14.03.2025–ம் தேதி காலை 07.00 மணியளவில் வேலைக்கு சென்றபோது அங்கு வாட்ச்மேனாக பணிபுரிந்த குப்புசாமி என்பவரும், அண்ணாமலை என்பவர் கையில் கொடுவாளுடன் நின்றுகொண்டிருந்தார். அப்போது குப்புசாமி அண்ணாமலை எஸ்டேட்டில் அத்துமீறி நுழைந்து புல்லினை அருந்ததாகவும் அதனை கேட்டபோது கெட்டவார்த்தையால் திட்டி அப்படி தான் புல்லை வெட்டுவேன் அத கேட்க நீ யாருடா என்று அண்ணாமலை திட்டி குப்புசாமியை அண்ணாமலை வைத்திருந்த கொடுவாளால் அவரை இடது கையில் வெட்டி விட்டார் என்றும், பின்னர் அங்கிருந்து அண்ணாமலை ஓடிவிட்டதாக என்னிடம் சொன்னார். பின்னர் காவல் உதவி ஆய்வாளர் குப்புசாமி தாக்கப்பட்டது குறித்து சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்து என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து இரத்தக்கறை படிந்த கொடுவாளிலை கைப்பற்றினார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

இல்லை.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R.Elanchezhian,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.